ALAGAPPA UNIVERSITY
[Accredited with A+ Grade by NAAC (CGPA:3.64) in the Third Cycle]
KARAIKUDI – 630 003, TAMIL NADU, INDIA



# அழகப்பா பல்கலைக்கழக உணவகங்களை நடத்துவதற்கு விலைப்புள்ளி கோருதல்.

அழகப்பா பல்கலைக்கழக வளாகத்திலுள்ள கீழ்க்காணும் இடங்களில் சைவ உணவகம் நடத்துவதற்கு அனுபவமும், தகுதியும் உள்ளவர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட உறையிலான விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எ ண் | இடங்கள் | அளவு | வாடகை ரூ. | தண்ணீர் கட்டணம் ரூ. | மின் கட்டணம் ரூ. | பிணை வைப்புத்தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | மாதத்திற்கு | | | |
| 1 | நிர்வாகக் கட்டிடத்தின் பின்புறமுள்ள உணவகம் | 5267 ச.அடி | 1000/- | 200/- | கணக்கீட்டின் படி | 15000/- |
| 2 | உடற்கல்வியியல் கல்லூரி வளாக உணவகம் | 2172 ச.அடி | 500/- | 200/- | கணக்கீட்டின் படி | 10000/- |
| 3 | கல்வியியல் கல்லூரி வளாக உணவகம் | 1220 ச.அடி | 500/- | 200/- | கணக்கீட்டின் படி | 10000/- |
| 4 | தொலைநிலைக் கல்வி இயக்ககத்திலுள்ள இரும்பு பெட்டி | 48 ச.அடி | -- | -- | கணக்கீட்டின் படி | 5000/- |
| 5 | பட்டமேற்படிப்பு வளாகத்திலுள்ள இரும்பு பெட்டி | 48 ச.அடி | -- | -- | கணக்கீட்டின் படி | 5000/- |

## விலைப்புள்ளிகள் வந்து சேர வேண்டிய நாள் 26.03.2018 மற்றும் நேரம் பிற்பகல் 3.00 மணி வரை

மேற்கண்ட இடங்களில் உணவகம் நடத்துவதற்கான நிபந்தனைகள்

1. உணவகம் நடத்தியது தொடர்பாக குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கான முன் அனுபவம் மற்றும் தகுதிக்கான சான்றிதழ்களின் நகலை ஒப்பந்தகாரர் இத்துடன் இணைக்க வேண்டும்.
2. ஒப்பந்த காலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 24 மாத காலமாகும்.
3. பல்கலைக்கழக வளாகத்தில் மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் சிற்றுண்டி வழங்கப்படுதல் வேண்டும்.
4. உணவக கட்டிடங்களை சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் பராமரித்தல் ஒப்பந்தக்காரரின் பொறுப்பாகும். குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒருமுறையாவது ஒப்பந்தக்காரர் வண்ணம் அடிக்க வேண்டும். அப்பணியை செய்தபின் பல்கலைக்கழகத்தின் உரிய அதிகாரிகளிடம் பணி முடிப்பு சான்றிதழ் பெறவேண்டும்.
5. உணவுகள் தயாரிக்க தேவைப்படும் தளவாடச் சாமான்கள் அனைத்தும் ஒப்பந்தக்காரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
6. அரசாங்கத்தால் பொது இடங்களில் விற்க தடை செய்யப்பட்ட பொருட்கள் எதையும் விற்பனை செய்தல் கூடாது.
7. பல்கலைக்கழக அனுமதி பெறாமல் கட்டிடத்தில் எவ்வித கட்டுமான மாறுதல்கள் செய்தல் கூடாது. மேலும் மின்சார இணைப்பில் மாறுதல் செய்யக்கூடாது.
8. உணவகங்களை உள்வாடகைக்கு விடுவதோ, வேறு ஒருவருக்கு (Sub Lease) அனுமதி அளிப்பதோ கூடாது.
9. ஒப்பந்தக்காரரால் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது. அவர்களுக்கான கூலி, பாதுகாப்பு, காப்பீடு மற்றும் இதர செலவை ஒப்பந்தகாரரே மேற்கொள்ளுதல் வேண்டும்.

**விலைப்புள்ளி சமர்ப்பிப்பவரின் கையொப்பம்** **பதிவாளர்**

10. மேற்கண்ட நிபந்தனைகளை மீறினால் ஒப்பந்தம் முன்னறிவிப்பின்றி உடனடியாக ரத்து செய்திட பதிவாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

11. ஒப்பந்த காலம் முடிந்த பிறகு கட்டிடத்தை எவ்வித சேதமுமின்றி முன்பு ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட நிலையிலேயே திருப்பி ஒப்படைக்க வேண்டும். ஏதேனும் சேதமிருப்பின் அதற்குரிய நஷ்டஈடான பல்கலைக்கழகம் தீர்மானிக்கும் தொகையை ஒப்பந்தகாரர் செலுத்த வேண்டும்.
12. ஒப்பந்த கால வைப்புத்தொகையாக மேலே குறிப்பிட்டுள்ள தொகை ஒப்பந்த நாளிலேயே செலுத்துதல் வேண்டும்.
13. மேலே குறிப்பிட்டுள்ள உணவகங்களை தொடர்ந்து நடத்த வேண்டும். ஏதேனும் காரணத்தினால் ஒரு வார காலத்திற்கு மேலாக உணவகத்தை நடத்தாமல் இருந்தால், ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.
14. உணவகங்களில் வழங்கப்படும் உணவுகளின் தரம் அவ்வப்போது பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பரிசோதிக்கப்படும். தரம் குறைவானதென அறியவந்தாலோ அல்லது இதர புகார்கள் ஏதும் பெறப்பட்டாலோ ஒப்பந்த உரிமத்தினை உடன் ரத்து செய்திட பதிவாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
15. மேற்கண்ட உணவகங்களுக்கு, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை (உணவு பாதுகாப்பு பிரிவு) மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தின் கீழ் பதிவு செய்து அதன் உரிமத்தை பதிவாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் உணவகம் நடத்தும் உரிமம் ரத்து செய்யப்படும்.
16. ஒப்பந்த காலம் ஒப்படைப்பு நாளிலிருந்து 24 மாத காலமாகும். பின்னர் ஒப்பந்தகாரரின் செயல்பாடுகளை வைத்தும், தரமான உணவுப்பொருட்களை வழங்குவதை மதிப்பீடு செய்தபின் குத்தகைக் காலம் மேலும் 12 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கப்படும்.
17. ஒப்பந்த காலத்தில் உணவகக் கட்டிடங்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படின் அதற்கு ஒப்பந்தகாரரே முழுப்பொறுப்பேற்க வேண்டும். இதற்கான தொகை முன்பணத்தில் பிடித்தம் செய்யப்படும் எனவும், பல்கலைக்கழக வளாகத்தில் உரிய அதிகாரிகள் ஆய்வு செய்யும்போது முழு ஒத்துழைப்பு தருவதுடன் அதிகாரிகளின் அறிவுரைகளை பின்பற்றப்படவேண்டும். உணவகத்தின் பராமரிப்பு மற்றும் மேற்காணும் நிபந்தனைகள் குறித்த பதிவாளரின் பரிசீலனை செய்த முடிவே இறுதியானது.
18. எந்த ஒப்பந்தப்புள்ளியையும் காரணம் ஏதும் தெரிவிக்காமல் தள்ளுபடி செய்ய பதிவாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
19. விண்ணப்பத்தாரர் மேற்கண்ட உணவகங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பிணைத்தொகையுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் உறையின் மேல் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு அதற்கான விலைப்புள்ளியை **“பதிவாளர் அவர்கள், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி”** என்ற முகவரிக்கு அளிக்க வேண்டும்.

20. **பல்கலைக்கழக அலுவலகத்தில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் 26.03.2018-அன்று பிற்பகல் 4.00 மணியளவில் திறக்கப்படும்.**

**விலைப்புள்ளி சமர்ப்பிப்பவரின் கையொப்பம்** **பதிவாளர்**

## விற்க வேண்டிய உணவு பண்டங்களின் விலை விபரம்.

| வ.எண் | உணவு பண்டங்களின் வகைகள் | எடை | விற்பனை விலையினை தாங்களே நிர்ணயம் செய்து ரூபாய் மதிப்பில் குறிப்பிடல் வேண்டும். (எண் மற்றும் எழுத்தால்) |
|---|---|---|---|
| 1. | Vegetable Puff | 1 no | |
| 2. | Egg Puff | 1 no | |
| 3. | Cutlet | 1 no | |
| 4. | Spl. Dosai | 150 gms | |
| 5. | Variety Dosai | 150 gms | |
| 6. | Tea | 100 ml | |
| 7. | Spl. Tea | 100 ml | |
| 8. | Coffee | 100 ml | |
| 9. | Spl. Coffee | 100 ml | |
| 10. | Boost | 100 ml | |
| 11. | Badam Horlicks | 100 ml | |
| 12. | Fresh Juice Items | 300 ml | |
| 13. | Veg. Fried rice | 480 gms | |
| 14. | Egg Fried rice | 480 gms | |
| 15. | Veg. Noodles | 480 gms | |
| 16. | Egg Noodles | 480 gms | |
| 17. | Salt Biscuits | 1 no | |
| 18. | Sweet Biscuits | 1 no | |
| 19. | Cake items | 1 no | |
| 20. | Coconut Burby | 1 no | |
| 21. | Cold Coffee | 100 ml | |
| 22. | Egg omlet | 1 no | |
| 23. | Siem (2 nos) | 70 gms | |
| 24. | Kandarpam (2 nos) | 70 gms | |
| 25. | Kepai Puttu (1 cup) | 50 gms | |
| 26. | Variety of Nuts (1 cup) | 50 gms | |
| 27. | Bonda (2 nos) | 70 gms | |
| 28. | Chappathi (1 pcs) with kuruma | 80 gms | |

விலைப்புள்ளி சமர்ப்பிப்பவரின் கையொப்பம் பதிவாளர்

| | | | |
|---|---|---|---|
| 29. | Lunch Limited (Parcel) (Sambar, Rasam, Butter Milk, 1-Porial/kootu, Pickles) | 300 gms | |
| 30. | Lunch Limited (Sambar, Rasam, Butter Milk, 1-Porial/kootu, Pickles) | 300 gms | |
| 31. | Lunch Unlimited (Sambar, Rasam, Butter Milk, 2-Porial, kootu, Pickles, Appalam + Extra Rice) | 500 gms | |
| 32. | Vadai | 40 gms | |
| 33. | Curd Vadai | 50 gms | |
| 34. | Sambar Vadai | 50 gms | |
| 35. | All Variety Rice (Curd, Tomato, Lemon, Sambar Rice) | 480 gms | |
| 36. | Variety Rice (Veg. Briyani) | 480 gms | |
| 37. | Idiyapam (2 Nos) with sambar & satinee | 190 gms | |
| 38. | Appam (2 Nos) with satinee | 190 gms | |
| 39. | Parotta (2 nos) with kuruma | 190 gms | |
| 40. | Uthappam (2 nos) with sambar & satinee | 190 gms | |
| 41. | Idly (2 Nos.) with sambar & satinee | 110 gms | |
| 42. | Poori (2 nos) with potato masala | 165 gms | |
| 43. | Ven Pongal with sambar & satinee | 250 gms | |
| 44. | Sweet Pongal | 250 gms | |

**மேற்கண்ட உணவுகளை கீழ்க்காணும் தரமான மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்க வேண்டும்.**

1. ஆவின் பால் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
2. கடலெண்ணை அல்லது நல்லெண்ணைகளை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. தரம் உறுதி செய்யப்பட்ட டீத்துாள் மற்றும் காபித்துாள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
4. உணவிற்கு பயன்படுத்தப்படும் அரிசி மற்றும் பருப்பு வகைகள் தரமானதாக இருத்தல் வேண்டும்.
5. உணவு தயாரிக்கும் இடங்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கும்படி பார்த்துகொள்ள வேண்டும்.

**விலைப்புள்ளி சமர்ப்பிப்பவரின் கையொப்பம்** **பதிவாளர்**

6. வாடகை, தண்ணீர் கட்டணம் மற்றும் மின்கட்டணம் மாதாமாதம் பல்கலைக்கழக கணக்கில் செலுத்த வேண்டும். (Excluding GST) மற்றும் இதர வரிகள்.
7. மேற்கண்ட உணவகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகையானது வருடத்திற்கு ஒருமுறை 5 சதவிகிதம் உயர்த்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு,**
**பதிவாளர்**

**விலைப்புள்ளி சமர்ப்பிப்பவரின் கையொப்பம்** **பதிவாளர்**